முருகப்பெருமான் துணை

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கருணைக்கொண்டு கைப்பட எழுதிய நூலாகும் இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும் என்பது சத்தியம் சத்தியம் சத்தியம்**

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 571**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

22.04.2021, வியாழக்கிழமை

1. வானவர்கள் போற்றுகின்ற வள்ளல் நீயே
வையகத்தை காக்க வந்த தவசி நீயே
தானதர்மம் உலகமெங்கும் பரவிட
தர்மயோகியாய் வந்த ஆறுமுக அரங்கனே
2. அரங்கனுக்கு சுப்ரமணியர் யானும் இனிதே
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
வரங்கள் பெற்று உலகை மீட்கவே
வடிவேலன் யான் உமக்கு சூட்சும சக்தியாக
3. வரங்கள் கூட்டி நித்தம் அருளிவர
வள்ளலே உன் கரம் பட்ட மக்களெல்லாம்
மக்களெல்லாம் வினைகள் நீங்கி ஞானிகளால்
மண்ணுலகை மாற்றுகின்ற சக்தி ஆவர்
4. ஆக்கமுடன் உன் தர்மத்தை கைக்கொண்டவரெல்லாம்
ஆக்கினைகள் அகன்றோடி கலியுகத்தில்
தேக்கமின்றி ஞானிகளாகி அற்புதத்தை
தேசிகன் உன் வழி தொடர்ந்து நிகழ்த்தி மகிழ்வர்
5. மகிழ்வு தருகின்ற மகா சக்தியாக
மரணத்தை நீக்குகின்ற மாதவசியாக
அகிலம் காக்கின்ற ஆறுமுகன் என் சக்தியாக
அரங்கனே உன்னை கலியில் படைத்துள்ளேன்
6. உள்ளபடி உன் சூட்சுமம் உணர்ந்த மக்கள்
உலகத்தில் எந்த துன்பங்கள் வந்தபோதும்
வல்லமைபட நீக்கி பாதுகாப்பு பெற்று
வரங்கள் கூடி உன் வழி நிலைத்து நிற்பர்
7. நிற்கவே அரங்கனே  கலியின் சிறந்த குரு
நிலைத்தன்மை கொண்ட யோகஞானகுரு
அற்புதம்பட ஏற்கும் இந்த அகிலமே
ஆறுமுகன் என் சூட்சும ரூபில் உலகம் மாற்றம் பெறும்

8. மாற்றம் தர அரங்கனை தேர்வுசெய்துள்ளேன்
மக்களை ஞானவழிகளை தடையற பெற்று
ஆக்கமுடன் பாதுகாப்பு வேண்டுமாயின்
அழியாமை பெறவேண்டுமாயின் உடனனுகி வாரீர் அரங்கன் உண்மை நெறி வழிக்கு
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.